# நெஞ்சு பொறுக்குதில்லையே...

எழுதுபவர் வித்தகன்

## பூசி மெழுக லண்டன் வந்த வாத்தியார்

தீபம் தொலைக்காட்சியின்ரை 'காலைக் கதிர்' நிகழ்ச்சி நடந்து கொண்டிருக்குது.

காரை நகர் அபிவிருத்திச் சங்கத்தின்ரை சார்பிலை ஊரிலை இருந்து வந்த மாஸ்ரர் ஒராள் பேட்டி காணப் பட்டுக் கொண்டிருக்கிறார்

தன்ரை கிராமத்துக்காக தானும் தன்ரை சங்கமும் செய்த சேவைகளை அவர் பட்டியலிட்டுக் கொண்டிருக்கிறார்.

கிராமத்தின்ரை வளர்ச்சிக்காக தண்ணி கொண்டு வந்ததை, மற்ற ஊர்களை விடத் தங்கடை ஊர் அடைஞ்சிருக்கிற வளர்ச்சியை தங்கடை சாதனை களைப் பற்றியெல்லாம் பெருமையாச் சொல்லிக் கொண்டிருக்கிறார்.

அந்தாள் செய்த சேவைகளை ரீவீயிலை வந்து சொன்னால் உனக்கென்ன எண்டு கேப்பியள்.

உண்மைதான். வாத்தியார் தானும் தன்ரை சங்கமும் செய்தசேவைகளைச்சொல்லிப்போட்டுப்போயிருந்தால் எனக்கும் இந்தப் பதிவை எழுத வேண்டிய தேவை வந்திருக்காது.

ஆனால் நாட்டு நிலமைகளைப் பற்றி கேக்கப்பட்ட கேள்விகளுக்கு முழுப் பூசனிக்காயைச் சோத்துக்கை மறைக்கிற மாதிரி வாத்தியார் சொன்ன பதில்கள் தான் நெஞ்சு பொறுக்காமல் என்னை எழுத வைச்சிருக்குது.

ஒரு ராணுவ முற்றுகைக்குள்ளை, திறந்த வெளிச் சிறைச்சாலைக்குள்ளை இருந்து வந்தவர் காரைநகர் ஒரு சொர்க்கபுரியா இருக்குது எண்ட மாதிரிப் பதில் சொன்னார்.

அது மட்டுமில்லாமல் படைகளின்ரை கெடுபிடிகள் நடவடிக்கைகள் பற்றிக் கேட்டதுக்கு அவையளாலை ஒரு பிரச்சினையும் இல்லை. எல்லாம் அமைதியா இருக்குது எண்டது தான் வாத்தியாரின்ரை பதில்.

வாத்தியாரின்ரை பதிலைக் கேட்டுப் போட்டுக் கேள்வி கேட்டவர் 'காரைநகரிலை இராணுவம் இல்லாமல் கடற்படையினர் இருக்கிறது இந்த அமைதியான சூழலுக்குக் காரணமா இருக்குமோ எண்டு கேக்க அதுக்கும் மாஸ்ரர் ஆமாம் போட்டார்.

இண்டைக்கு நினைச்சாலும் குலை நடுங்கிற மாதிரி நடுக்கடலிலை நடந்த குமுதினிப் படகுப் படுகொலை, ஊர்காவற்துறையிலை தர்சினி என்ற இளம் யுவதி கற்பழித்தக் கொல்லப்பட்டு கிணத்துக்குள்ளை போடப்பட்ட சம்பவம், அல்லைப்பிட்டியிலை குடும்பமாக் கொல்லப்பட்ட சம்பவம் அதைத் தொடர்ந்து அந்தக் கிராமமே ஊரை விட்டு வெளிக்கிட்டது எண்டு நடந்த அநியாயங்களுக்கெல்லாம் காரணமா இருந்தது கடற்படை தான் எண்டது கேள்வி கேட்டவருக்கோ அல்லது அந்த வாத்தியாருக்கோ தெரியாமல் போனது தான் ஆச்சரியமான விசயம்.

ஐயாவின்ரை பேட்டியைக் கேட்டுக் கோபப்பட்டு சில பேர் போனிலை கதைச்சவையள்.

அதிலை ஒராள் ஐயா நீங்கள் காரைநகர் ஒரு சொர்க்கபுரி, அமைதிப் பூங்கா எண்டு சொல்லுறியள் நானும் அங்கை வந்து குடியேறலாமோ எண்டு யோசிக்கிறன் எண்டு நக்கலாச் சொல்லிப் போட்டு நாங்கள் யாழ்ப்பாணத்திலை ஆள் கடத்தல் கொலை கொள்ளை எண்டு பயங்கரங்கள் நடக்குது எண்டு கேள்விப்படுறம். யாழ்நகரிலையும் வலிகாமம் பகுதியிலையும் நிலமை எப்படி இருக்குது எண்டு சொல்லுங்கோ எண்டு கேக்க நான் அங்காலைப் பக்கம் அடிக்கடி போய் வாறதில்லை. அதாலை அங்காலை நிலமைகள் எனக்குத் தெரியாது எண்டு மழுப்பலாப் பதில் சொன்னவர்.

நாங்கள் ஆயிரம் மைல்களுக்கப்பாலை இருந்து அறியிற விசயங்களை ஒரு 20 மைல்களுக்கங்காலை இருக்கிற ஒரு அபிவிருத்திச் சங்கத்தின்ரை தலைவர் அதிலும் ஒரு வாத்தியார் அறியாமல் இருக்கிறார் எண்டு ஒரு பக்கம் ஆச்சரியப்பட்டாலும் இந்தக் 'கிணத்துத் தவளையை' நம்பி ஒரு அபிவிருத்திச் சங்கம் நடத்திற பொறுப்பை ஒப்படைச்சிருக்கினமே எண்டு கவலையாவும் இருந்தது.

**ஒரு ராணுவ முற்றுக்கைக்குள்ளை, திறந்த வெளிச் சிறைச்சாலைக்குள்ளை இருந்து வந்தவர் காரைநகர் ஒரு சொர்க்கபுரியா இருக்குது எண்டு பதில் சொன்னதை ஜீரணிக்க முடியேல்லை**

ஐயாவின்ரை பேட்டியைக் கேட்டதிலை ஐயா ஒரு திட்டத்தோடை தான் லண்டனுக்கு வந்திருக்கிறார் எண்டதும் யாழ்ப்பாணத்தின் உண்மை நிலமைகளை மூடி மறைக்க பூசி மெழுக அல்லது யாருக்கோ வெள்ளையடிக்க வெளிக்கிட்டிருக்கிறார் எண்டதும் வடிவா விளங்கிச்சுது.

தமிழ் மண்ணையும் தமிழ் மக்களையும் காக்க தங்கடை உயிர்களையே அர்ப்பணிச்சுப் போராடுற எங்கடை பிள்ளைகளையும் தமிழ் மண்ணிலை சிங்கள அரசாங்கம் கட்டவிழ்த்து விட்டிருக்கிற இன அழிப்பையும் சிங்களப் படைகளின்ரை மனித உரிமை மீறல்களையும் சிங்களப் படைகளின்ரையும் ஒட்டுக் குழுக்களின்ரையும் அராஜகங்களையும் வெளிக் கொண்டு வந்ததுக்காய் தங்கடை உயிர்களையே தந்த நிமலராஜன், தராக்கி சிவராம், நடேசன் போன்ற ஊடகவியலாளர்களையும் ஜோசப் பரராஜசிங்கம், ரவிராஜ் போன்ற அரசியல் வாதிகளையும் தந்த தமிழ் மண் அந்தச் சிங்களத்தின்ரை இன அழிப்பை, படுகொலைகளை பூசி மெழுகப் புறப்பட்டிருக்கிற 'வாத்தியார்' மாதிரி யான ஆக்களையும் தந்திருக்குதே எண்டது தான் கவலையான விசயம்.

அந்த ஆள் இப்படி சிங்களப் படைகளுக்கு வக்காலத்து வாங்கிக் கொண்டிருக்க தொலைபேசி அழைப்பெடுத்த சிலபேர் 'ஐயா நானும் உங்கடை ஊர் தான் நீங்கள் ஊருக்காக இவ்வளவு சேவைகள் செய்யிறியள் எண்டு அறியிறதிலை வலு சந்தோசம்' எண்டு ஐயாக்கு பாராட்டு மழை பொழிஞ்சதை நினைச்சால் அழுகிறதா சிரிக்கி றதா எண்டு தெரியேல்லை.

எல்லா ஊடகங்களிட்டையும் நான் கேக்கிறது என்னெண்டால் இதுமாதிரிஉண்மைகளை இருட்டடிப்புச் செய்து சிங்களத்தின்ரை அநியாயங்களுக்கு வெள்ளைச் சாயம் பூசுற அல்லது வக்காலத்து வாங்கிற ஆக்களுக்கு மேடை அமைச்சுக் குடுக்கிற தவறைச் செய்யாமல் இருப்பம் எண்டது தான்.

# கொசோவா ஏற்படுத்தும்...

*(15ம் பக்கத் தொடர்ச்சி)*

சமாதான ஒப்பந்தத்திற்கு உண்மையாகவே இந்தியா ஆதரவளித் திருந்தால், மகிந்தரின் ஒருதலைபட்ச ஒப்பந்த முறிவினை கடுமையாக எதிர்த்திருக்க வேண்டும். சிலவேளை, மறைமுகமாகக் கண்டனமும் தெரிவித்திருக்கலாம்.

அரசிற்கு தொடர்ந்தும் படைக் கலங்களை வழங்குவதும், தமிழகத்தில் புலி எதிர்ப்புப் பிரச்சாரங்களை தமது உளவுப் படையூடாக கட்டவிழ்த்து விடுவதும், இந்தியாவின் இரட்டைப் போக்கினை தெளிவாக வெளிப்படுத்துகிறது.

**கொசோவா தனிநாட்டுப் பிரகடனத்தோடு, சர்வதேச அரங்கில் சுயநிர்ணய உரிமைப் போர் குறித்த புதிய விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளது.**

வடக்கிலும், தெற்கிலும் இந்திய எதிர்ப்பலைகள் கருக் கொள்வதால், அதைத் தணியச் செய்ய இந்திய ஊடக ஆய்வாளர்கள் சில புதிய புனைக் கதைகளோடு பரப்புரைப் பணி புரிய களத்தில் குதித்துள்ளனர்.

சிறீலங்காவில் இந்திய அமைதிப்படை சாதிக்க முடியாதவற்றை, கொசோவாவில் நேட்டோ படைகள் நிறைவேற்றியுள்ளன.

ஈழ விடுதலை இயக்கங்களின் போர் ஆயுதங்களை கீழே போட வைத்த இந்திய தேசம், சிங்களபௌத்த நிர்வாகப் பரவலாக்கத்தை ஏற்றுக் கொள்ளும்படி தமிழ் மக்களை வற்புறுத்தியது.

ஏக தலைமையான விடுதலைப் புலிகள் மீது யுத்தம் தொடுத்து தமிழர் தேசத்தை அழித்தது இந்திய ஆக்கிரமிப்புப் படை. ஆனாலும் கொசோவா விடுதலை இராணுவத்தின் ஆயுதங்களை ஒப்படைக்கும்படி வேண்டுகோள் விடுத்த நேட்டோ படைகள் அவர்களை ஜனநாயக அரசியலிற்குள் அனுமதித்து, அம்மக்கள் கூட்டம் தனியரசினை பிரகடனப்படுத்தியபோது, அதனை அங்கீகரித்து மிகவும் பெருந்தன்மையாக நடந்து கொண்டது.

பிராந்திய நலன் என்பதற்குமப்பால், அணி சேர்ந்தவர்களின் உரிமைக் குரலை செவிமடுத்த மேற்குலக வல்லரசுகளின் உறுதியான நிலைப்பாட்டினை, இந்திய ஆய்வாளர்கள் ஒப்பீட்டாய்வு செய்வது நல்லது.

ஏட்டிக்குப் போட்டியாக, ஜோர்ஜியாவில் அங்கீகாரம் கோரி நிற்கும் அப்காசியா (ABKHAZIA) , தென் ஒசேசியா (SOUTH OSSETIA) பிரதேசங்களின் தனியரசு பிரகடனத்தை இரஷ்யா ஏற்றுக் கொள்வது, அடக்கப்படும் தேசிய இன நலன்களுக்கு உகந்தது.

அதேவேளை தனியரசுகள் உருவாவதை எதிர்க்கும், பொதுவான அரசியல் பண்பு நிலை காரணமாக, இரஷ்யா வன்மையாகக் கண்டிக்கலாம்.

பெப்பரவரி 17, கொசோவா தனிநாட்டுப் பிரகடனத்தோடு, சர்வதேச அரங்கில் சுயநிர்ணய உரிமைப் போர் குறித்த புதிய விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளது.

நீண்ட காலமாகப் பிரிவினை கோரிப் போராடும் பாலஸ்தீனம், தமிழீழம் போன்றவை ஒருதலைப்பட்ச சுய பிரகடனத்தை வெளியிட்டுவிடுவார்களோவென்ற பதட்டம் பரவலாக சகல மட்டத்திலும் மேலோங்கியுள்ளது,

அதைத் தடுப்பதற்கு, பூலோகவல்லரசுகள், தமக்கிடையேபுதிய அணிசேரல் களையும், தற்காலிகக் கூட்டுக்களையும் உருவாக்க எத்தனிக்கிறார்கள்.

போராடும் தேசிய இனங்களின் தனியரசு அமைக்கும் பாதையில், அடுத்ததாக பாலஸ்தீனமா அல்லது தமிழீழமாவென்கிற ஆய்வுகளும், அலசல்களும் மிதக்க ஆரம்பித்துள்ளன.

இதுவரை தமிழ் தேசிய விடுதலைப் போராட்டப் பாதையை சரியான திசையில் நிர்மாணித்து, வழிநடாத்திக் கொண்டிருக்கும் தேசியத் தலைவர், வல்லரசுகளுக்கிடையே தற்போது வெடித்துள்ள உள் முரண் நிலைகளை சரிவரக் கையாண்டு, சுயநிர்ணய உரிமைப் போராட்ட வரலாற்றினை முன்ன கர்த்தும் உந்து விசையாகத் திகழ்வாரென்கிற உறுதியான நம்பிக்கை தமிழ் மக்களுக்கு உண்டு.

**TRICO** - *The name you can trust*

**Door to Door Service**
Western province by air & Sea
Call for details Regular Shipping service
At competitive Prices to:
***Australia, Canada, Chennai, Banga-lore, Cochin and Calcutta***

*Two more collection points:*
***Glasgow and South West London***
Regular weekly savings means the fastest deliv-ery to Sri Lanka.

**TRICO HAS MOVED**

**HOT NEWS**
Extra Receiving depot in South - London SW17
You can collect packing cases and deliver packed goods to SW17.
Save your money on transport

உங்கள் வசதிக்காக **Tooting** இல்
***Collecting point!***
**A - Lanka**
*171 Tooting High Street, London SW17*

*Contact* **Vimal**
Tel: **020 8672 5551**
Fax: **020 8889 5445**
Email: tricont@btclick.com

***Trico International Shipping Ltd.***
***555 Whitehart Lane, (Safehouse Storage) London, N17 7RP***